**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR**

**DEPOSITION OF WITNESS**

**P.W.2**

**MCOP No.9/2022**

| | |
|---|---|
| **Name** | : துரைராஜ் |
| **Father's Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 27.11.2025.**

**ம.சா.2 முதல் விசாரணை:-**

1) எனது முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண சாட்சியாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள வாசகங்கள் என்னால் சொல்லப்பட்டுள்ளது தான். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் இம்மனுவின் மனுதாரர் தரப்பில் 2 வது சாட்சி. ஆவணங்கள் எதுவும் இல்லை.

**2 ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை**

2) இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சத்தம் கேட்டு தான் பார்த்தேன் என்றால் சரியல்ல. அருகில் இருந்தேன். மேற்படி விபத்து சாலையின் வடக்கு புறம் நடைபெற்றது. மேற்படி விபத்தில் இறந்துபோன பாலாஜி வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சாலையில் வரும் போக்குவரத்தை கவனிக்காமல் திடீரென்று சாலையை கடந்ததால் தான் இந்த விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. பாலாஜி கவனக்குறைவால் தான் இந்த விபத்து நடைபற்றது என்றால் சரியல்ல. கார் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்தது. இறந்து போன பாலாஜி விபத்து சமயம்

தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. பாலாஜி எனது வேலையாள். அவர் என்னுடைய கம்பெனியில் ஹெல்பராக வேலை செய்த வந்தார்.

3) விபத்து ஏற்பட்டதும் ஆத்தூர் அரசு மருத்துமனைக்கு ஆமபுலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தது நான் தான் என்றால் சரிதான். அப்போது அவர் உயிருடன் இருந்தார். ஆத்தூர் அரசு மருத்துமனைக்கு வரும்போது அவர் உயிருடன் தான் இருந்தார் என்றும் அவர் இறந்தது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பாலாஜி மேற்படி விபத்தில் தலைக்கவசம் அணியாததால் அவருக்கு ஏற்பட்ட தலைக்காயத்தின் காரணமாக தான் சேலம் மருத்துமனையில் இருந்தார் என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்டுகொண்டதற்கு இணங்க மேற்படி பாலாஜி எனது கம்பெனியில் வேலை செய்து வந்ததால் இழப்பீடு கோருவதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.27 17:59:10 +0530

**Accidents Claim Tribunal, Attur.**